# மெட்ரோ பயணம்: மாணவர்கள் உற்சாகம்

**சென்னை, பிப். 25–**
மெட்ரோ ரயிலில், 4,000 மாணவர்கள் இலவச பயணம் மேற்கொண்டனர்.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

மெட்ரோ நிறுவனம், நிலையங்களில், ரயில்களில் உள்ள வசதிகள், நவீன தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு செயல்பாடுகளை, பள்ளி மாணவ – மாணவியர் தெரிந்து கொள்ள ஏதுவாக, ரயிலில் இலவச பயணம் அழைத்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில், 2019ம் ஆண்டு, நவம்பர், டிசம்பர் மற்றும் 2020ம் ஆண்டு, ஜனவரியில், அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த, 4,205 மாணவ – மாணவியர், மெட்ரோ ரயிலில் இலவச பயணம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பிற மாவட்டங்களில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ – மாணவியர், மெட்ரோ ரயிலில் கல்வி சுற்றுலா பயணம் அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என, மெட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.